# விவேகபாநு

## ஒருமாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

அகரமுதலவெழுத்தெல்லாமாதி
பகவன்முதற்றேயுலகு—திருக்குறள்.

வால்யூம் I] டிசம்பர்மீ 1-உ [புத்தகம் 4

### ஈகை.

இப்பிரபஞ்சத்தின் கண் தோன்றிய உயிர்கள் பலவுள் உத்தம ஜன்மமாகிய மனிதஜன்மத்தை யடைந்த ஜீவர்கள் சிலரேயாம். அவரி லொருவருக்கொருவ ருள்ளபேதம் அளவற்றதாயிருப்பினும், அவர் யாவரும் உலகத்தில் நிற்கும் நிலையின் பேதங்களை ஒருவாறு உணரக்கூடும். நமது முன்னோர் அவைகளை நான்காகப்பிரித்திருக்கின்றனர். அவை யாவன:— பிரமச்சரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசமாம்.

குணம், தொழில், நம்பிக்கை முதலியன எங்ஙனமிருப்பினும், மாந்தர் இந்நால்வகை ஆச்சிரமங்களுள் ஏதேனுமொன்றில் நிற்கவே நிற்கின்றார்கள். அங்ஙனம் நிற்பவருள் முதலாச்சிரமத்திற் குரியோராகிய பிரமசாரிகள் ஆசாரியனிடத்தோதி, விவாகமின்றி விரதங்காத்திருப் போராயும், மூன்றாவதாச்சிரமத்திற் குரியோராகிய வானப்பிரஸ்தர் இல் லந்துறந்து இல்லாளோடாயினும் தனித்தாயினும் வனத்தில் தவஞ்செய் பவராயும், நான்காவதாச்சிரமத்திற் குரியோராகிய சந்நியாசிகள் அகப் பற்று, புறபபற்றுகளை முற்றுந்துறந்தோராயும் இருத்தலின் அம்மூவகை ஆச்சிரமத்தார்களும் இலௌகிக காரியங்களில் ஒருவருக் கொருவர் உதவிசெய்யும் வலியில்லாதவராயிருக்கின்றனர். ஆனால் இரண்டாவ தாச்சிரமத்திற் குரியோராகிய கிரகஸ்தர் இல்லாளோடுங்கூடி இல்லறத் தில் வாழ்பவராதலின் அவரொருவருக்கொருவர் மாத்திரமன்றி ஏனைய ஆச்சிரமிகளுக்கும் வேண்டுமுதவிபுரியத் தக்கவராயிருக்கின்றனர். ஆ கவே உலகத்தின் உயர்வும் தாழ்வும் இவருடைய ஆதீனமாகவே இருக் கின்றன. ஒவ்வொரு ஆச்சிரமத்திற் குரியோரும் அவரவர் ஆச்சிரம

தர்மத்தை வழுவாது நடத்தினன்றி உலகம் நன்மையும் சுகமுமடையா.
தேனும், இல்லறத்தார் வழுவின் ஏனையோரும் தமது ஆச்சிரமதர்மங்
களினின்றும் நழுவும்படி நேருமாதலின் அவர் சிறிதும் தவறுதொழுகல்
உலக நன்மையின் பொருட்டு மிக்க அவசியமாயிருக்கின்றது.

கிரகஸ்தாச்சிரமத்திற்குரிய அறங்கள் பலவுளவேனும், தெய்வப்
புலமை திருவள்ளுவநாயனார்

"மேலுலக
மில்லெனினு மீதலே நன்று"

(இதன்பொருள்:— ஈந்தார்க்கு மேலுலகில்லை யென்பாருளராயினும்
ஈதலேநன்று. ஈதலே என்னும் பதத்திலுள்ள பிரிநிலை ஏகாரம்பிற அறங்
களின் ஈதல் சிறந்ததென்பதைக் குறிப்பிக்கின்றது.) என்று திருவாய்
மலர்ந்தருளி யிருக்கின்றமையின் அவற்றுள் ஈதலே தலைமைத்தென
விளங்குகின்றது. அத்தகைய மேலான அறத்தை யாவரும் கடைப்பிடித்
து ஒழுகவேண்டியதாயிருக்க, தற்காலத்தில் ஜனங்கள் அதை முழுவ
தும் கைவிட்டு பொருளல்லாததும் அநித்தியமுமான பொருளையே பொ
ருளாகவும் நித்தியமாயுள்ளதெனவும் கொண்டு, தம்மிடம்வந்து யாசிப்
பவருக்குத் தம்மாலியன்ற அளவும் ஒரு சிறிதேனும் ஈயாது, புகல்சொல்
லியும், நிந்தித்தும், பயப்படுத்தியும் அவரை ஓட்டிவிடுகிறார்கள். இவ்வி
ஷயத்தில் ஆயுதப்பிரயோகம் கூடச்செய்கின்றவர்கள் சிலர் இருக்கிறார்
கள். இவர் என்னகருத்துக்கொண்டு இங்ஙனம் செய்துவருகின்றனர்?
தாம் நித்தியமாயிருந்து அப்பொருளைத்தாம் அனுபவித்தற்குக் காரணமா
யிருக்கும் உடலின்தன்மையை அவர் அறிந்திலர் போலும். அவ்வுட
லமோ

"பிசமழை மொக்குளிற் பல்காலுந் தோன்றிக்
கெடும்" எனவும்

"மலையாடு மஞ்சுபோற் றோன்றி மற்றாங்கே
நிலையாது நீத்துவிடும்" எனவும்

ஆன்றோர் கூறி யிருப்பதையும் பிரத்தியக்ஷமாய்த் தினம் தினம் பார்க்
கிறதையும் மறந்து அதனை நித்தியமாயெண்ணிப்புல்லறிவினையே உடை
யேம் யாமெனக் காட்டுகின்றனரே. இது நிற்க, அவருடைய செல்வந்
தான் எத்தன்மைத்தாயிருக்கின்றது? அதன் தன்மையும் நிலையாமையன்
றோ?

"அற்கா வியல்பிற்றுச் செல்வம்"

(இதன்பொருள்:—செல்வம் நில்லாத இயல்பையுடையது.) எனவும்

"கூத்தாட் டவைக்குழாத் தற்றேபெருஞ்செல்வம்
போகுமது விளிந்தற்று" எனவும்

மேலோர் கூறி யிருக்கின்றனரே. இவ்விஷயமும் யாவர்க்கும் பிரத்தியக்ஷ அனுபவமன்றோ? அங்ஙனமிருந்தும் மாந்தர் ஏனோ இங்ஙனமுழல்கின்றனர்! நித்திரை செய்பவனை ஒருவன் எழுப்பக்கூடும். விழித்துக்கொண்டுறங்குபவனை எழுப்புதலெங்ஙனம்? கூடாதாகலின் அவரவரே தத்தம் அறியாமையையும் அதனால் வரும் கேட்டையும் உய்த்துணர்ந்து விழிப்பாராக. இவர் நிற்க, வேறு சிலர் உள்ளன்பின்றி வேண்டியவாறு வழங்கி வள்ளலெனும் கீர்த்திபெற முயற்சிக்கின்றனர். அவரிடத்தில் பசியால் வருந்து மொருவன்சென்று, தனது பசிநோய்க்கிரங்க வேண்டுவானாயின், அவர் அவனைப்புறத்தே தள்ளுகின்றனர். ஆனால் அவருடைய நாமதைக், கல்லிலோ மற்றச் சாதனத்திலோ பதிப்பதற்கிடையுள்ள எவ்வித ஈகையும் அவர் செய்யத்தயாராயிருக்கின்றனர். இதனால் அவருத்தேசம் என்னவென்று விளங்குகின்றது? யாவரும் தன்னைப்புகழ வேண்டுமென்பதன்றோ? அத்தகையார் இரகசியமாய்ச் செய்யும் ஹீன மனத்தின் காரியத்தைப் பிறர் அறியாது ஒரு சமயம் அவரைப்புகழ்வாராயினும், அவர் பகிரங்கமாய்ச்செய்யும் கொடையினால் மற்றவர்களுக்கு ஒருவிதப்பிரயோஜன மிருப்பினும் அவைகளால் அவருக்குப்பயன் யாது? சிறிதுமில்லை யென்பதே உண்மை.

ஈதல் தர்மமென்றும் அதனாலொருவன் நற்கதி யடைவானென்றும் மேலோர் ஆராய்ந்துரைத்ததின் காரணந்தான்யாது? ஈதலினால் மனமானது விரிந்து சுயநயம்பாராட்டுந்தன்மை இழக்கப்படுமென்றன்றோ? சுயநயம் எம்மட்டிருக்கின்றதோ அம்மட்டும் 'நான்' 'எனது' என்னும் பேய்விட்டொழிதலின்று. அதுவிட்டொழியினன்றி பந்தம் நீங்குதலின்று. அதுநீங்கினன்றிச் சுகமேது? புகழ்பற்றிச்செய்வதும் ஒருவித லாபத்தைக் கருதி யாதலின், அதை ஈகை யென்றெவ்விதம் சொல்வது? ஈதலினால் புகழுண்டாமென்பதில் ஐயமில்லை. ஆனால் எவனொருவன் புகழை நாடி மாத்திரமும் அகத்திலன்பின்றியும் ஈதலைக்கைப்பற்றியிருக்கின்றானோ அவனைப்பெரியோர் புகழவே புகழார். அவனுக்கும் வட்டியை அபேக்ஷித்துத் தன் பணத்தைப் பாங்கியில் இடுபவனுக்கும் பேதம் என்னை? இவன் பொருள்வரவை நோக்கிப் பணத்தைப் பிறருக்குக்கொடுக்கின்றான். அவன் புகழ் வரவை நோக்கிப் பிறருக்களிக்கின்றான். இருவரும் ஒத்தே யிருக்கின்றனர். ஆதலினிவ்விருவருக்கும் கொடையின் பயன் வாய்ப்பதில்லை. அங்ஙனமேல் கொடையின் லக்ஷணந்தான் யாதெனின்,

"வறியார்க் கொன்றீவதே யீகைமற் றெல்லாம
குறியெதிர்ப்பை நீரதுடைத்து."

(இதன்பொருள்:—பிறர்க்குக் கொடுத்தலாவது ஒரு பொருளு மில்லாதார்க்கு அவர் வேண்டியதொன்றைக் கொடுப்பதே. அஃதொழிந்த எல்லாக் கொடையும குறி யெதிர்ப்பைக் கொடுக்கும் நீர்மையையுடைத்து. குறி யெதிர்ப்பையாவது அளவு குறித்து வாங்கி அவ்வாங்கியவாறே எதிர்கொடுப்பது.) என்று மேலோர் கூறி யிருக்கின்றனர். இவ்வாக்கியத்தில் 'வறியார்க்கு ஈவது' என்பது அன்பின்காரணமாக உண்டாகும் கொடையே கொடை யெனவும் பாத்திரா பாத்திரம் இன்னதெனவும் குறிப்பிக்கின்றது. இந்நிலையை உள்ளபடி யுணர்ந்து ஒருவன் ஈகையைக் கடைப்பிடிப்பானாயின் அவனுக்கு அந்த க்ஷண முதல் இன்பம் ஜனிக்கின்றது. பெற்றோர் தம்குழந்தைகளுக்கொன்று ஈவதில் எத்தனை சந்தோஷமடைகிறார்கள். அஃது அன்புகாரணமாகச் செய்வதினாலன்றோ? அதுபோலவே அன்பினால் தூண்டப்பட்டு, ஒருவன் தன்னையுடையும் வறியார்களை குழந்தைகளாகப்பாவித்து ஈவானாயின், அவனுக்குக்கொடுக்குந்தோறும் மிக்க குதூகலமும் ஆனந்தமும் உண்டாமென்பதில் சந்தேகமென்ன?

"அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு"

என்று கூறியிருத்தலினாலும் அன்புவாயிலாகப் பிறக்கும் கொடையில் துன்பம் சிறிது மின்றி ஆனந்தமே பயிக்கிற தென்பது பெறப்பட்டது.

இம்மையிலேயே இத்தனை பலனைக்கொடுக்கும் ஈகையானது. மறுமையில் எத்தனை கொடுக்குமென்பதை விளம்பவும் வேண்டுமா? ஐயோ! இவ்வுண்மையை அறியாமல் மாந்தர் யாசகரை இகழ்கின்றனரே.

"இரவலர் தம்மை யெள்ளுமேழை காளியம்பக்கேளீர்
நரகமோக்கத்தை விற்க நண்ணிய வணிகரன்றோர்
பரகதி அவரைத்தாங்கும் பண்பினர்க் கேவரள்ளல்
கரவுளார்க்கெவ ரென்னின் அவர்தமை யுறநலென்னே"

என ஆன்றோர் கூறியிருத்தலின், வறியோராய்வந்து கையேந்துவாரை அலக்ஷியஞ் செய்யாமலும் தாமே அவரைக்காப்பாற்றுபவராக நினைத்து அகங்காரமென்னும் யானைவாய்ப்படாமல், தம்மிடத்தில்கொடுக்க இருத்தலின் அதனை உதவுவது தம்முடைய கடமையென ஓர்ந்தும்

"இம்மியரிசித் துணையானும் வைகலும்
நம்மிலியைவ கொடுத்துண்மின்"

எனெனில்

"உம்மைக்

கொடாதவரென்பர் குண்டுநீர்வையத்
தடாஅ வடுப்பினவர்"

(இதன்பொருள்:—ஆழமான கடல்சூழ்ந்த பூமியில் சமைக்காத அடுப்பையுடையவர்—சோற்றுப் பிச்சைக்கு வருகின்றவர்—முற்பிறப்பில் யாசகருக்குக் கொடுக்காத லோபிகளென்று பெரியோர் சொல்லுவர்.)

இதுவரை கூறிவந்த ஈகையின் தன்மையை நன்குவிளக்கும் சிறிய கதையொன்றுவரைகின்றேன். அஃதாவது:—

இப்பரதகண்டத்தின் திலகமாய் விளங்கும் தென்னாட்டில்கொடையில் பேர்பெற்ற தலைவள்ளல்களில் ஒருவனான 'குமணன்' என்னும் பேர் வழங்கிய அரசனொருவன் இருந்தான். அவ்வரசனுக்கு 'அமணன்' என்னும் ஓர் சகோதரன் இருந்தான். அவன் தன்தமையனைப்போலவே ஈகைத்தன்மையில் கீர்த்திபெறும் பொருட்டு யாசிப்பவர்களுக்கெல்லாம் வேண்டிய மட்டும் கொடுத்துவந்தும் தன்னுடைய புகழ் உலகப்பிரசித்தியாகாமையை நோக்கித் தன் தமையனிடம் சென்று, ஒருபாயத்தால் அவனை வனம்புகுவித்து, தான் அரசாட்சிசெய்துவந்தான். தான் முன்போலவே கொடுப்பதுடன் அரசனாகியும் தமையனைப்போல் தனக்குப் புகழுண்டாகாமையால் அவன் மரித்தாலன்றித் தனக்குப்புகழ்கிட்டாதென நினைத்து அவன் சிரசைக் கொண்டுவருபவர்க்குக் கோடி பொன் கொடுப்பதாக விளம்பரஞ்செய்தான். இவ்விஷயம் வனத்தில் வசிக்கும் தமையன் செவிக்கும் எட்டிற்று.

இங்ஙனமிருக்கையில் மிடி (வறுமை) யென்னும் அக்கினியினால் தகிக்கப்பட்ட வித்வானொருவன் அதன் வெப்பத்தைச் சாந்திசெய்யத்தக்கவன் குமணனே யெனக்கேள்வியுற்று வனத்திற்சென்று அவனைக்காண, குமணராஜன் "நீயாவன்? எங்குவந்தாய்?" என வினவ வித்வானும்

"ஆடெரி படர்ந்த கோடுயரடுப்பில்
ஆம்பி பூப்பத்தேம் பசியுழல
இல்லிதூர்ந்தன பொல்லாவறுமுலை
சுவைதொறும் சுவைதொறும் பால்காணாமல்
குழவிதாய் முகம்நோக்க மனைவி
என்முகம் நோக்க யானும்
நின்முகம் நோக்கி வந்தனன் குமண"

என்றனன். அதுகேட்டு அரசன் வித்வானுடைய திறமைக்கு வியந்தும் அவன் வறுமையை நோக்கிப் பரிதபித்தும்

"அந்தநாள் வந்திலை யருங்கவிப் புலவோய்
இந்நாள்வந்து நீ நொந்தெனையடைந்தாய்
தலைதனைக்கொடுபோய்த் தம்பிகைக் கொடுத்தென்
விலைதனைபீட்டுன் வெறுமைநோய் களையே"

என்று சொல்ல, வித்வான் கேட்டு நடுநடுங்கி, அரசனது வள்ளற் றன்மையை மிகவும் வியந்து அமணனுடைய கடின சித்தத்திற்காக அவனை இகழுங்கால் குமுணராஜன் அவனை நோக்கி

"வெம்புங்காலை வெந்தம்பி விழுஞ்சிரம்
செம்பொன் கோடி விலையெனச் சிந்தித்தான்
உம்பர் நாட்டு மூலகினும் தேடினும்
எம்பிபோ லெமக்கி யாவருரியரோ."

(இதன்பொருள்:—எனது சிரம் பிராரத்தம் நீங்குங்காலத்தில் தானேவிழுவதொன்று. அதற்குக் கோடி பொன் விலைகொடுப்பதாய் எனது தம்பி பறையறைவித்தான். ஆதலின்பூலோகத்திலும்தேவலோகத்திலும்தேடிப் பார்க்கிலும் எனது தம்பியைப்போலெனக்குரியவர் ஒருவருமில்லை. எனச் சொல்லினன். இவையெல்லாம் செவியுற்ற வித்வான் தனக்கு நேரிட்டிருந்த வறுமையின் கொடுமையை மறந்தவனாய் குமுணராஜனை மிகவும் புகழ்ந்து "சுவாமின்! அடியேனுடையவறுமையெல்லாம் நீங்கிற்று. அடியேனுக்கு வேண்டுவதொன்றுமில்லை. நான் போய்வருகிறேன்" என்று விடைபெற்றுக்கொண்டு அமணனிடத்திற்சென்று குமுணராஜனுடைய தலைபோன்ற ஒருதலைசெய்து சந்திநேரத்தில் அவனிடத்தில் காண்பித்து, விளம்பரப்பிரகாரமுள்ள கோடி பொன்னையும் கேட்டான்.

அத்தலையைக் கண்டமாத்திரத்தில் அமணன் சிம்மாசனத்திலிருந்தபடியே மூர்ச்சித்துக் கீழேவிழ, மந்திரி முதலானவர்கள் ஒருவாறு அவனை மூர்ச்சையினின்றும் எழுப்பினர்கள். எழுந்த அரசன் சகோதரவாஞ்சையாலுண்டான சோகத்தால் ஜீவித்தல் அரிதென உணர்ந்த வித்வான், நடந்தவரலாற்றையெல்லாம் அமணனுக்குணர்த்த, அரசன் சோகம் நீங்கி ஆனந்த பலிதனாய் "ஆ ஆ!! அத்தனை பெருமை பொருந்தியவனன்றோ இச்சிம்மாசனத்திலிருக்கத்தக்கவன், அவனே புகழுக்குடையான்" என்று சொல்லி மந்திரி பிரதானிகளுடன் வித்வான் வழிகாட்ட, தமையனிருந்தவனம் சென்று அவருடைய பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து, தனது அறியாமையாற் செய்த பிழையை மன்னிக்கவும் பூர்வம்போல் இராச்சியத்தை ஒப்புக்கொண்டு அரசுசெலுத்தவும்வேண்டுமென்றுபிரார்த்திக்க, குமுணனும் அதற்கிணங்கி அரசாட்சியைச் சுவீகரித்துக் குன்றாப் புகழோடு பின்னும் வெகுகாலம் இராச்சியபரிபாலனம் பண்ணி முடிவில் மேலான பதவியை அடைந்தான் என்பதே.

V. O. சிதம்பரம்.

ச்த்சாஸ்திரங்கள் என்னும் பாற்கடலில் விவேகம் என்னும் மந்தரமலையை நட்டு ஆராய்ச்சி என்னும் வடங்கொண்டு கடையின் முதலில் சந்தேக விபரீதம் என்னும் விஷம் எழும். அதனைத்தெளிதல் என்னும் அரன் உண்வாயுட்கொண்டபின் கடைந்தெடுக்கப்படு மெய்ஞ்ஞானம் என்னும் அமிர்தம் சத்குருவென்னும் பகவானால் பகிர்ந்துகொடுக்கப்படும் பக்குவர்கள் என்னும் தேவர்கள் ஆசையென்னும் பசிதாகங்கள் நீங்கி, அஞ்ஞானம் என்னும் மிருத்தியுவை ஜயித்து, சிதம்பரம் (சிதாகாயம்) என்னும்பொன்னகரில் வசிப்பார்கள்.

*
**

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, என்று சொல்லப்படுகின்ற நான்கு பூதங்களுக்கும் அவகாசங்கொடுத்து அவைகளிலெல்லாம் நிறைந்திருக்கும் பூதமாகிய ஆகாயமானது பிருதிவிபூதத்தின் ஓர்விதப் பரிணாமமும் அளவு கருவியுமாகின்ற மரக்காலிலும் நிறைந்திருக்கிறதென்றுணராமல் அவ்வாகாயத்தை மரக்கால்கொண்டு அளவிடப்புகும் அறிவிலியை நிகர்த்து பிருதிவி முதல்நாதம் இறுதியாகச் சொல்லப்படும் சகல தத்துவங்களுக்குமாதாரமாய் அவைகளிலெல்லாம் வியாபித்துப் பரிபூரணமாக நிற்கும் பரவஸ்துவானது தமது மனோவாக்குகளிலும் பூரணமாய் நிறைந்திருக்கிறதென்பதை ஓராமல் அப்பரம்பொருளை மனதினால் கணிக்கவும் வாக்கினால் அளக்கவும் சிலர் பிரயாசைப்படுகின்றனர்.

*
**

வெள்ளை, சிவப்பு, நீலம் முதலிய பல நிறங்களையுடைய கண்ணாடிகளாற்செய்யப்பட்ட அறையொன்றிற்புகுந்த ஓர் ஞமலி(நாய்)சுற்றிலுமுள்ள கண்ணாடிகளிற் பல நிறத்தனவாயுள்ள அநேக நாய்கள் பிரதிபிம்பித்துத் தோன்றுவதைக்கண்டு எங்ஙனம் முறுமுறுத்துக்குரைக்கின்றதோ அங்ஙனமே பலவேறுபாடுகளையுடைய முக்குணங்களால் நிர்மிக்கப்பட்ட இச்செகத்தின்கண் புகுந்தமாந்தரிற்சிலர், தம்மைச்சூழ்ந்துள்ள ஜீவர்கள்யாவரும் ஒரே (தமது) ஆத்மாவின் பிரதிபிம்பங்களென்றுணராமல் அவர்களோடு சீறித் துவேஷிக்கிறார்கள்.

*
**

பல கிளைகளையுடைத்தாயிருக்கு மரமானது காற்றடிக்கும்பொழுது மிகவும் அசைவுறுகின்றது. ஆனால் கிளைகளெல்லாம் கோடாரியால் தரிக்கப்பட்டுப்போய்த் தனித்தபொழுது அதுவே சலனமின்றி நிற்கின்றது. அதுபோன்று பெண்டு, பிள்ளை, பந்து, மித்திரர் முதலிய சகல விஷயங்களிலும் ஆசைவைத்து அவைகளைத்தாங்கி நிற்கும் மாந்தர் மாயை என்னும் காற்றினால் மோதப்பட்டு, சதா சலித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவ்விஷயங்களோடுள்ள பற்றுக்களெல்லாம் வைராக்கியத்தினால் சேதிக்கப்பட்ட காலத்தில் அவர்களே நிச்சலமாயிருக்கிறார்கள்.

*
**

ஓர் கூத்தாடியானவன் நெடிய கம்பத்தினுச்சியில் நின்று அநேக விநோதமான வித்தைகளைக்காட்டுகிறான். அப்பொழுது அவனுடைய சாதுரியத்தைக்கண்டு அநேகர் மெச்சுகிறார்களாயினும் அவன் கம்பத்தினுச்சியில் நிற்கும்வரை அவனுக்குச்சம்மானமாகும் பலம்கிட்டுகிறதில்லை. அதுபோலவே அகங்காரத்தினுச்சியில் நின்றுகொண்டு வேண்டியவாறு ஞானப்பிரசங்கஞ்செய்யுமொருவனை, பலபேர் மெச்சினும் அவன் அகங்காரத்தின முகட்டில் நிற்கும்வரை அவனுக்கு மோக்ஷபலம் சித்திக்கிறதில்லை.

*
**

ஒருவன் துக்கத்தினால் கண்ணீர்பெருக்கி நிற்கிறான். மற்றொருவன் ஆனந்தத்தினால்கண்ணீர்பெருக்கிநிற்கிறான். அவ்விருவரையும் பார்க்கின்ற விவேகமில்லாதொருவன் அவரதுண்மையை ஓர்ந்து குறியாது, புறத்தோற்றத்தையே ஆதாரமாய்க்கொண்டு இருவரும் துக்கத்தினால் கரைகிறதாகவே சொல்கின்றான். அதுபோலவே உலகவிஷயங்களை விரும்பி, பற்பல கருமங்கள் செய்பவர்களையும் தமக்கு யாதொன்றிலுமிச்சையின்றிப்பரோபகார நிமித்தம் பற்பல கருமங்கள்செய்பவர்களையும் காணும் அவிவேகிகள் அவ்விருதிறத்தாருடைய மனோபாவனையின் பேதத்தையுணராமல் புறத்தோற்றத்தைவைத்தே இருவரையும் ஒரே தன்மையாகக் கிரகிக்கின்றனர்

*
**

நடுக்காட்டில் தானியம் சிதறிக்கிடப்பதைக்கண்டு ஆகாயத்தில் பறக்கும் பக்ஷிகளில் சில, தமக்குவரும் கெடுதியையறியாமல் அதைப் பொறுக்கித் தின்னலாமெனக் கருதிச் சென்று, கண்ணியில் விழுந்து வேடன்கைவசப்பட்டு நாசமடைகின்றன. ஆனால் புத்தியுள்ள சில பக்ஷி

கள் தானியம்கிடப்பது வலையிலென்றும் சமீபத்தில் வேடன்மறைந்திருப்பானென்றும் அறிந்து அதை நெருங்காமல் விலகிப்பறந்துபோய்விடுகின்றன. அதுபோன்று சூது, மதுபானம், ஸ்திரீஜனம், பிராணிவதை இவைகளிருக்குமிடங்களில் உலகத்திலுள்ள மாந்தர் சிலர் தமக்கேதோ பிரயோஜனமடையலாமெனக்கருதித்தமக்குநேரும் கெடுதியைப் பாராமற்சென்று பாபத்திற்குள்ளாதலின் கலியென்பவன் கைவசப்பட்டு நாசமடைகிறார்கள். ஆனால் விவேகிகள் அவைகளிருக்குமிடங்களிற் சென்றால் பாபத்திற்படவேண்டிவருமென்றும் சமீபத்தில் கலியிருப்பானென்றுமுணர்ந்து அவைகளை நெருங்காமல் தூர விலகிவிடுகிறார்கள்.

வள்ளிநாயகம்.

---

# அறிவு.

(55-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

சிலர், அதனை எறும்பின்மேல்வைத் தாராய்ந்து, அவ்விருவர் [1]கூற்றையும் மறுப்பர்.

சிலர், அறிவென்பது உடம்பின் ஓரிடத்திலேயே [2]நிகழ்வது. அது பொறிகளின் வழியாய்ப் புலன்களை அறியும். [3]அவை அவ்விடத்தோடு [4]தொடர்புடையவாய், அவ்வுடலின்கண் உள்ள வெவ்வேறுபொருளைத் தாக்கும். தாக்குந்தோறும் அவ்வப்பொருளின் கண் ஒருவகை அதிர்ச்சி நிகழும். அவ்வதிர்ச்சியால் அவை செலுத்தப்பட்டு, அவ்வறிவு நிகழும் இடத்திற் சேறலால் அஃது அறியும் என்கின்றனர்.

சிலர், [5]அற்றாயின் அவ்வவ்வகை அதிர்ச்சி அவ்வவ்வகை அறிவாய் மாறுதல் [6]யாங்ஙனம்? என்கின்றனர்.

சிலர், ஒரு வீட்டின்கண், ஓரிடத்து, [7]ஒருபுடை, ஒரு விளக்கிருப்ப, அவ்விளக்கின் ஒளி அவ்விளக்கினின்றும் [8]புடைபெயர்ந்து, அவ்விளக்கினையும் [9]விட்டிடுதலின்றித் தொடர்ந்து நின்று, அவ்விளக்கிற்கும் அவ்விடத்திற்கும் [10]இடையீடு ஒருசிறிதும் இன்றி, அவ்விட

---

1 கூற்றையும்—கொள்கையும். 2 நிகழ்வது—இருந்து விளங்குவது.
3 அவை—அப்புலன்கள். 4 தொடர்புடையவாய்—சேர்ந்ததாய்.
5 அற்றாயின்—அவ்வாறாயின், 6 யாங்ஙனம்—எப்படி.
7 ஒருபுடை—ஒருபக்கம். 8 புடைபெயர்ந்து—இடம்நீங்கி.
9 விட்டிடுதலின்றி—விடாமல். 10 இடையீடு—மத்தியிடம்.

முழுதும் பரவுற்றால் எவ்வாறு பரவிநிற்குமோ அவ்வாறே, உடம்பின்கண் ஓரிடத்தொருபுடை உயிர் நிற்ப, அவ்வுயிரின் அறிவு அவ்வுயிரினின்றும் புடைபெயர்ந்து, அவ்வுயிரையும் விட்டிடுதலின்றித் தொடர்ந்துநின்று, அவ்வுயிர்க்கும் அவ்வுடம்பிற்கும் இடையீடு ஒரு சிறிதுமின்றி, அவ்வுடம்பு முழுதும் பரவிநின்று அறியும் என்பர்.

சிலர், விளக்கும் விளக்கொளியும் போல்வனவல்ல உயிரும் அறிவும், [1] அவற்றோடிவற்றிடை வேற்றுமை பெரிதென்பர்.

சிலர் உயிர் அவ்வுடம்பளவிலேயே நிறைந்தறியும் என்பர்.

சிலர் உடலின் சிறுமை பெருமை முதலியவற்றிற் கேற்ப, அவ்வுயிரும் அறிவும் அவ்வாறாகாமையின் அது பொருந்தாதென்பர்.

சிலர் உயிர், அவ்வுயிரின்கண்ணும், அவ்வுயிர்க்கு [2] நிலைக்களமாகிய உடம்பின்கண்ணும், அவ்வுடம்பு நிற்றற்கிடமாகிய இந்நிலவுலகத்தும், மற்றெவ்வுலகத்தும், எவ்விடத்தும் நிறைந்துநின்றெல்லாம் அறியுங் கடவுளைப்போலவே எவ்விடத்திலும் பரந்துநின்றறியும் என்பர். அதனைப்பலரும் மறுப்பர்.

இம்மட்டோ, இன்னும் அவ்வறிவொன்றனையே அறிஞர்கள் பலரும் பற்பல [3] படியாய் அறிந்தார்கள், அறிகின்றார்கள், அறிவார்கள் !!!

அவையெல்லாம் ஒவ்வோருண்மையைப்பற்றி நின்றுகொண்டு, [4] ஓர்த்துணர்ந்தே கூறப்படுவனவாம். அவ்வாறாயின் அவரெல்லாம் அங்ஙனம் ஓர்த்துணருங்கால், ஒருவரோடொருவர் உடன்பட்டும், எதிர்மறுத்தும், [5] ஒத்தொவ்வாதும் ஓர்த்துரையாடுதல் என்னையோவெனின், அஃது அவ்வவர், தாம் தாம ஓர்த்துணரும் [6] நெறி பலவாதல் பற்றியேபோலும்.

அன்றியும் அவர் தங் கொள்கையெல்லாந் தனித்தனியெடுத்துத் [7] துலைநாவென்ன ஒருபாற் கோடாது ஒப்பநாடி, ஒழுங்குபெற நிறுத்து உயர்வு தாழ்வு [8] தோற்ற முறைப்பட வகுத்துத், தனித்தனிவழிமொழிந்து விரித்துரையாடித், [9] தன்றுணிபுரைத்து, அவையெல்லாந் தன்

1 அவற்றோடிவற்றிடை வேற்றுமை பெரிதென்பர்—விளக்கு விளக்கொளிகளைப்பார்க்கிலும் உயிர் அறிவுகளிடத்து வித்தியாசம் அதிகம் என்பர்.

2 நிலைக்களம்—இருப்பிடம். 3 படியாய்—விதமாய்.

4 ஓர்த்துணர்ந்தே—ஆராய்ந்தறிந்தே. 5 ஒத்தொவ்வாதும்—உடன் பட்டும்படாமலும். 6 நெறி—வழி.

7 துலைநாவென்ன ஒருபாற் கோடாது ஒப்பநாடி ஒழுங்கு பெற நிறுத்து—தராசு நாக்கைப்போல் ஒருபக்கம்கோணாது ஒத்திருக்கும்படியாகச் சரியாய் ஒப்பிட்டு.

8 தோற்ற முறைப்பட—தெரியும்படி கிரமமாக.

9 தன்றுணிபுரைத்து—தனது தீர்மானத்தைச்சொல்லி.

வழிப்படுத்தல் யார்க்கும் அரிது. என்னை? a "அரியகற்று ஆசற்றார் கண்ணுந் தெரியுங் கால், இன்மையரிதே b வெளிறு" என்பது பொய்யாமொழி யாகலின்.

ஆயினும் அறிஞரெல்லாம் ஆராயத்தகும்பொருளாய், அறிவென்ப தொன்று உளதாதலை மறுத்தலின்றி ஒருங்கொத்து c உடன்படுகின்றனர். என்னை? அவர் அதனை உடையராகலின்.

அற்றாயின் அதனைக்காட்டுகவெனின், 'அதனைக்காட்டுக' வென்ப தெதுவோ அதுவே அறிவென்பதன்றி, இது காணறிவென்றுதந்து காட்டி, அதன் d பிழம்புணர்த்தலாகாது. பொருள்கள் உண்மையும் பிழம்பும் ஒருங்கே உணர்த்தப்படுவனவும், உண்மையொன்றே உணர்த்தப்படுவன வும் என இருவகைய. அவற்றுள் இது உண்மை யொன்றே உணர்த்தப் படுவது.

இனி, அறிவென்பது உடம்பின் கண்ணதோ? உடம்பேயோ? பொறிகளின் கண்ணதோ? பொறிகளேயோ? உட்கருவிகளின் கண்ண தோ? உட்கருவிகளேயோ? உயிரின் கண்ணதோ? உயிரேயோ? உயி ரின்வேறாய் மற்றியாதானும் ஒன்றன்கண்ணதோ? அதுவேயோ? ஒன் றன் e பண்பேயோ? அப்பண்பியேயோ? அது தானே அறிவதோ? பிறி தொன்றானறிவதோ? தடைப்பட்டதோ? தடைப்படாததோ? தடை நீக்கமேயோ? உயிரின் விளக்கமேயோ? புறத்துநின்றும் உயிரின்கண் ஒவ் வொன்றாய் வந்து நிரம்பிப் பின்னர் ஒரு தொகுதியாய் நிற்பதேயோ? உயிரின் கட்டோன்றி அவ்வுயிரின்கண் ஒடுங்குவதேயோ? என இவை யும், இவைபோல்வனவுமாகிய பற்பலவினாக்களை f வழிமொழிந்தும், நிகழ்த் தியும், அவற்றிற்கெல்லாம் தனித்தனி விடைதேர்ந்து தெளிதலே அவ் வறிவின் கிளர்ச்சி அல்லது வளர்ச்சிக்குத் துணைசெய்வதாயினும், அது தான் ஓரிடத்திலேயே, ஒருபொழுதிலேயே முடிவதன்று. அவற்றினியல் பெல்லாம் பொதுவகையானுஞ் சிறப்புவகையானும், வினாதலின்றி, காலடைவில், நூலானும், கேள்வியானும், உய்த்துணர்வானும், பிறவாற்றானும் உணர்ந்து, g கருகாது தெளிந்து h கோடற்பாலனவாம்.

---

a இக்குறளின் கருத்து:—அரியநூல்களைக் கற்றுக் குற்றம்நீங் கியவரிடத்தும் அறியாமையில்லா திருக்கை யரிது.

b வெளிறு—அறியாமை, அஞ்ஞானம்.

c உடன்படுகின்றனர்—ஒப்புக்கொள்கின்றனர்.

d பிழம்பு—திரட்சி வடிவம்.

e பண்பு—குணம். f வழிமொழிந்தும்—முறையேகேட்டும்.

g கருகாது—மயங்காது. h கோடற்பாலனவாம்—கொள்ளுந் தன்மையனவாம்.

அவ்வாறாயின் அறிவினுண்மைதான் எதனான் அறியப்படுமெனின், அறிவானாய செயல்களைக்கண்டவிடத்து, இவை ௬ உண்மையான் ஈங்கு அறிவுண்டென்று கருதி யறியற்பாலது.

தி. பா. சிவராமபிள்ளை.

(இன்னும் வரும்)

---

# ஜோதிடமயல் நீக்கம்.

(69-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இவ்வுலக சாஸ்திரங்களில் பண்டிதத்தன்மை வகித்த சிலர், மேல் நடக்குங்காரியங்களை முன்கூட்டிச் சொல்லுவதாகச் சொல்லுகின்றனர். அவர் சொல்வது பகவானுடைய சாஸ்திரானு சாரமாகவிருப்பின், பலித மாம். ஆனால் பகவானானவர் தம்முடைய அளவுகடந்த கருணையினால் இத்தகைய தீர்க்கதரிசிகளுக்கு 'நான்' 'எனது' என்னும் அகங்கார, மம காரங்களையுடைய பந்தத்தினின்றும் விடுதலையாகும் மோக்ஷத்தைக் கொடுக்க விரும்பின், வருங் காரியங்களைப்பற்றி முன்னுணர்த்தும் அவர் களுடைய சொற்கள் பயனற்றதாகும்படி செய்கிறார். அங்ஙனம் அவர் கருணைபுரியாராயின் 'நான்' 'எனது' என்னும் இரண்டு கழுகுகளும் அவர் களுடைய இருதயத்தை ஓயாமற் பக்ஷிக்க நேரிடும்.

பகவானானவர் இருதயத்தை எவ்விதமாக நடத்துகிறாரோ, அவ் விதமாகவே நாக்கும் பேசுகின்றது. அவ்வார்த்தைகளைப் பேசுமவரோ உண்மையையுணர்க்கவும் அதைப்பார்க்கவும் செய்கிறார்.

தீமையின் சம்பவங்களைப்பற்றி முன்கூட்டிசொல்லுபவர்களுடை ய வார்த்தைகளுக்குச் செவி கொடுக்கவோ அவைகளால் பயப்படவோ வேண்டுவதில்லை. நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்? உங்களுடைய மாதா, பிதா, குரு, ஆத்மாவாகின்ற பகவானானவர் சுயம்பிரகாசராயும், ஸ்தூல, சூக்ஷ்மங்களாயுள்ள சகல பொருள்களாயும், அதிரிசியராயுமிருக்கிறார். அவர் உங்களிலெல்லாம் வியாபித்து பகுக்கக்கூடாதவராயும் அகண்டமா யுமிருக்கிறார். ஜோதியே அவருடைய தோற்றமாகவிருக்கிறது. உங்க ளுடைய மனதை ஒருவழிப்படுத்தி அவருடைய பாதாரவிந்தங்களில் நிலைக்கச்செய்வீராயின் நன்மையே சொரூபமாகவுடைய அவர் உங்களு டைய தீமையெல்லாம் ஓட்டிவிடுவார்.

---

௬ உண்மையான்—இருக்குந்தன்மையால்.

அவர் தம்முடைய சிருஷ்டிப்பொருள்களைத் தற்காலத்திலொடுக்கிவிடார்; அவை சுருங்கவுமாட்டாது. எக்காலத்தில் மாந்தர் வருத்தத்துடன் வழிதப்பி நடக்கின்றனரோ அக்காலத்தில் அவரை நல்வழியிற் செலுத்துகிறார். தீமையின் பயத்தால் பீடிக்கப்படாமல் மெய்வழியில் நடப்பவர் இல்லையென்று சொல்லும்படி, மனுஷிய சுபாவம் அவ்வளவு கெட்டதாக இருக்கின்றது. யாதொரு பயனுமின்றி, தம்முடைய பிராணிகளை ஹிம்சிக்கும்படி பகவானானவர் அவ்வளவு மதியினரா? தன் கடமையையுணர்ந்து நடக்கும் குடியை இராஜன் சிக்ஷிக்கிறதில்லை. நல்லொழுக்கமுடைய குமாரனை தகப்பனும் கண்டிக்கிறதில்லை.

குருக்ஷேத்திரத்தில் யுத்தம் நடந்தகாலத்திலிருந்தநிலையில் கோள்கள் யாவும் தற்காலத்தில் கூடியிருந்து, அதுபோலொத்த பின்வரும் துக்க சம்பவத்தை முன்னுணர்த்துகின்றனவென்று ஹிந்துஜோதிடர்கள் அறைகின்றனர். நன்றாய் ஆராய்ந்து உண்மையைக் கடைப்பிடியுங்கள். சித்த சமாதானத்தோடும் புத்தித்தெளிவோடும் உண்மையை நாடுபவர்களுக்கு அவ்வுண்மை மறைக்கப்படாதென்பதே கடவுளின் நியமம்.

சத்தியமானது யாவர்க்கும் சத்தியமே. அது ஏகமாயும், சுயம்பிரகாசமாயும், ஸ்தூல, சூக்ஷ்ம, காரணங்களாயும், சர்வ வியாபகமாயும், ஜோதியே தோற்றமாகவுடையதாயுமிருக்கின்றது. அத்தகைய சத்தியப்பொருளாய பகவானுடைய சக்திகள், குணங்கள் அல்லது அவயவங்களே பற்பலவிதமாய் தேவர்களென்றும், தேவிகளென்றும், நவக்கிரகங்களென்றும், இராசிகளென்றும், நட்சத்திரங்களென்றும் அழைக்கப்படுகின்றன. சிலர் சொல்வதுபோல் ஆகாயத்திற்றோன்றும் ஜோதிகள் பகவானுக்கன்னியமாயுள்ளவையாயின், அவைகளிருந்திருக்கவேமாட்டாதென்று சந்தேகமற உணருங்கள். ஏனெனின் 'பகவான்' என்னும் பதமானது, உள்ளபொருள்கள் யாவற்றையும் குறிக்கின்ற பதமாகும். சூரியன், சந்திரன், ஜீவாத்மா என்னும் மூவிதத்தோற்றங்களையுமுடைய ஜோதியென்ன, பஞ்சபூதங்களென்ன இவைகளுக்கன்னியமாக பகவானிருக்கிறதொன்பதில்லை. மனோவாக்குக்கெட்டாத அதீத நிலையில், பகவான் நிர்குணராயிருக்கின்றார். அவரோ காணப்படுபொருளாயும், காணப்படாப்பொருளாயும், எண்ணிறந்த ரூபங்களையுடையவராயும் ரூபமற்றவராயுமிருக்கின்றார். இவ்வுண்மை உங்களிருதயத்தில் தங்குமாயின், சூரியன் சந்திரன் முதலிய கோள்கள், நக்ஷத்திரங்கள், மற்றெல்லா சராசரப்பொருள்கள் இவைகளின் ஸ்தூல சரீரங்களும் உள்ளிருந்து வேலைசெய்யும் சக்திகளுமாகிய யாவும் அவ்வேகவஸ்துவினுடைய அவயவங்களினாலேயே ஆக்கப்பட்டுள்ளதென்பதுணர்வீர். நவக்கிரகங்களாகவும், நட்சத்தி

ரங்களாகவும், ஜீவாத்மாகவுமிருந்து பகவான் அகமும் புறமு முள்ளயாவற்றையுமறிகிறார். அவரோ சிருஷ்டிக்கவும், இரக்ஷிக்கவும், வேண்டுங்காலம் இப்பிரபஞ்சத்தைத் தமக்குள்ளேயே ஒடுக்கிக்கொள்ளவும் செய்கிறார். நவக்கிரகங்களையும், நக்ஷத்திரங்களையும், ஜீவாத்மாக்களையும் தமக்குக் கருவிகளாய்க்கொண்டு, நன்மையோ, தீமையோ, விவேகமாயுள்ளதோ, அவிவேகமாயுள்ளதோ அவரவர்க்கு வேண்டியவாறு பகவான் செய்து வருகிறார். அவர் செய்வதை உரோமத்தளவேனும் விலக்க வேறொருவருமிலர். பகவானுடைய அவயவங்களாகின்ற கோள்கள், நக்ஷத்திரங்கள் என்று சொல்லப்படும் அவருடைய சக்தியினால் எது செய்யப்படுகிறதோ அது செய்யப்பட்டதே. மூடர்களின் கண்ணுக்கு ஒன்றே பலவாகத்தோன்றுகின்றது. அவர்க்கு நவக்கிரக முதலியன பலவாயும் வெவ்வேறாயும் தோற்றுகின்றன.

இதுவரைச் சொல்லிவந்ததின் தாத்பரியமென்னவெனின் அஞ்ஞானத்தினாற் பலவாயும் அபகாரஞ்செய்வனவாயும் தோன்றும் நவக்கிரகாதிகள், உட்பார்வை அல்லது மெய்ஞ்ஞானத்தினால் ஏகமாயும் உபகாரஞ்செய்வனவாயும் தோன்றுகின்றன. பகவானுக்கன்னியமாய் கோள்களோ, நக்ஷத்திரங்களோ தோன்றமாட்டா. தோன்றுவனயாவும் பகவத்சொரூபமாகவே நிச்சயிக்கப்படும்.

கோள்கள் நக்ஷத்திரங்கள் இவைகளுக்குள் ஏதேனுமொன்றில்லாதிருக்குமாயின், லௌகிக, வைதீகப்பிரவிர்த்தியாவும் உடனே முடிவுக்குவந்துவிடும். பகவானின் பாதமாகிய பூமியாகிற அண்டமில்லையாயின் ஆகாரமில்லாமல் மரணமடையவேண்டிவரும். பிருதிவி பலவித பரிணமங்களையடைந்து சகல பிராணிகளுக்கும் ஆகாரம் உதவி, அவர்களுடைய தசையும் எலும்புமாகின்றது. அதுபோலவே ஜலம் தாகத்தைத்தணித்து இரத்தமும் மற்றைச்சரீர ரசங்களுமாவதுந்தவிர மழைரூபமாய், பூமியைச் செழிக்கச்செய்கிறது. அக்கினியென்று சொல்லப்படும் நக்ஷத்திரம் அல்லது கோள் பிராணிகளிடத்தில் பசியாகவும் பேசுகிறவும் ஜீரணிப்பிக்கிறவும் சக்திகளாகவும தோன்றுகின்றது. சமஷ்டிப்பிரபஞ்சத்தில், அக்கினியானது சகல விகாரங்களையுமுண்டுபண்ணுகிறவும், இரவிருட்டைப் போக்குகிறவுமான சக்தியாயிருக்கின்றது. வாயுவானது, ஜீவர்களுக்குள்ளே பிராணவாயுவாகி ஓடிக்கொண்டிருக்கின்றது. அஃதில்லையாயின் ஜீவித்தலே செல்லாது. ஆகாயம், எங்கும் வியாபித்திருக்கின்றது. அதனாலேயே பிராணிகள் கேட்கவும், அசையவும், அசைவற்றிருக்கவும் செய்கிறார்கள். சந்திரன், சங்கற்பமுதலியன செய்கின்றமனதாயிருக்கின்றது.

பகவானுடைய நேத்திரமாயிருக்கும் சூரியன், நமக்குள்ளே நேத்திரமாயும், மெய், பொய் இவைகளைப் பகுத்தறியும் விவேகமாயுமிருக்கின்றது. உட்சோதியும் புறச்சோதியும் ஒன்றுபடுங் காலத்து, மாந்தர்களின் மனோவாக்குக்கெட்டாத காரண நிலையிற்றங்கி, நீங்கள் சாந்தியடைவீர்கள். கடவுளின் இத்தகைய சக்திகள், குணங்கள் அல்லது அவயவங்களே ஜோதிடத்தில் நவக்கிரகாதிகளாகச்சொல்லப்பட்டிருக்கின்றனவென்றறியுங்கள்.

புறத்தெவ்விடத்தேனும் யாதாமொன்றிருப்பின் அஃதுங்கள் அகத்துமிருக்கின்றது. வானத்திலுள்ள கோள்களைக் கணிதங் கொழித்து, மெய்ஞ்ஞானமென்னும் ஆரதிருஷ்டிக் கண்ணாடியை அகத்தே திருப்புவீராயின் சகல குற்றங்களும் ஒழிந்துபோகும். புறத்தேதோற்றும்ஜோதியானது சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், மின்னல் என்றும் வேறு பற்பல நாமங்களாலும் அழைக்கப்படுகின்றது. அதே ஜோதியே உங்களுள்ளின், மனம், புத்தி, சக்ஷு, சுரோத்திரம் முதலிய பற்பல சக்திகளாகவிருக்கின்றது. புறச்சோதியில் அல்லது அஞ்ஞானத்தில் அவையாவும் பலவாயும் வெவ்வேறுயும் தோற்றுகின்றன. உட்சோதியில் அல்லது மெய்ஞ்ஞானத்தில் ஏகமாயும் ஒரேதன்மையாயும் தோன்றுகின்றன. பார்க்கிறவனாகவும், கேட்கிறவனாகவும், நினைக்கிறவனாகவும் நீங்களே பற்பல ரூபமாயிருக்கிறதுபோல, பகவானே, சூரியனாகவும், சந்திரனாகவும் நட்சத்திரங்களாகவும், நீங்களாகவும் இன்னும் பற்பல ரூபமாகவும் ஆனால் பகுக்கக்கூடாத ஏகராகவுமிருக்கிறார்.

பூமி முதலிய யாவும்பகவானுடைய அவயவங்களாக, பற்பலதேவதைகளாக அல்லது நவக்கிரகாதிகளாகச் சொல்லப்பட்டன. ஆனால் எதார்த்தத்தில் அங்ஙனமல்ல. பகவான் அவயவரகிதராயிருக்கின்றார். எளிதிலுணரும்பொருட்டே அவர் அவயவசகிதராகச் சொல்லப்படுகின்றார். எங்கெங்கே நீங்கள் அவரை பார்ப்பீர்களோ அங்கங்கே அவர் ஏகராயும் சர்வவியாபகராயுமிருப்பார். ஆனால் யாதாமொரு சக்தி எவ்விடத்தில் வேலை செய்யினும் அது தன்னுடைய வேலையைச்செய்யுமேதவிர, பிறிதொன்றினைச் செய்யவலியற்றதாயிருக்கின்றது. வேறுவிதத்தில் வேலை செய்விக்க முயல்வது தப்பிதம்; ஏனெனின் பயன்படுதலின்று. ஒவ்வொரு விஷயத்திலும் இதனுண்மையையுணர்ந்து, உணர்ந்தவாறு நடப்பின், மாந்தர் நித்தியசுகத்தையடைவது திண்ணம்.

இப்போது சொல்லிவந்ததின் தாத்பரியம், உண்மை சீக்கிரத்தில் பிரபலமாகி, பொய்மை நசித்துவிடுமென்பதே, பகவானுணர்வார்சிலருடைய

வாக்கின் மூலமாய் சத்திய வார்த்தைகளையனுப்பி, மற்றவர்களுடைய இருதயத்திலிருந்து அவரே அங்கீகரிப்பார். மனிதர்கள் பொய்யைச் சந்தோஷமாய்த்தள்ளி, மெய்யைச் சுவீகரிப்பார்கள். துவேஷத்திற்கும் சண்டைக்கும் பூமியில் இடமில்லாதேயாகிவிடும். ஒருவருக்கும் யாதொரு குறைவும் நேரிடாவண்ணம் இராஜகுமாரர்களும் ஏழைக்குடியானவர்களும் ஒன்றுசேர்ந்துவிடுவார்கள். பகவானை எல்லாரும் 'ஓம்' அல்லது 'ஓம் தத்சத்' என்றுசொல்லி ஸ்மரிப்பார்கள். நாலுபக்கங்களிலிருந்தும் சந்தோஷகரமான ஸ்தோத்திரங்களும் அக்கினியில் ஆகுதியும் செய்யப்படும். வேதம், விவிலியம், கொரான் இவைகளின் சாரமாகும் பகவானைக் குறித்த, புதிய நூலொன்று செய்யப்படும். மனிதர்கள் சந்தோஷமாய் இந்நூலைத்தவிர மற்றைய நூல்களைத் தள்ளிவிடுவார்கள். கோள்களின் இந்நூதனச்சேர்க்கையால் புதிய கால இயற்கையின் வரவு எதிர்பார்க்கப்பட்டிருக்கின்றது. பகவானுக்குப் பிரீதியுண்டாகி, மழை தாராளமாய் வருஷித்து, பூமியெங்கும் செழிக்கும். குறைகளும் துன்பங்களும் நிவிர்த்தியாகும். உலகம் மனிதனைத் துன்புறுத்தாதொழியும். கேவலமானதும் பிரயோஜனமில்லாததுமான பொருள்கள் பூமியினின்று நீங்கும். சந்தோஷகரமான ஸ்தோத்திரங்களுடன் சத்தியப்பொருளானது உலகத்தில் நிலைநிறுத்தப்படும். பகவத்சங்கற்பானுசாரம் நடக்கமுயல்பவர் சுகமாய் வாழக்கடவர். மற்றையர் துக்கத்திற்கே ஆளாவர். ஓம் சாந்தி.

பரசாந்தி உங்கட்கெல்லாம் பலிக்கக்கடவது.

பரமஹம்ஸ சிவநாராயண சுவாமி.

---

# அறிவுவிளக்கம்.

சுத்த பிரமத்தில் அக்கினியிற் சூடுபோல் தோன்றிய, இவ்வுலகில் வாசனுவம்சத்திற் பிறந்த, சராசரங்களுள் பரிசவறிவொன்றுடைய தாவரங்களுக்கும், பரிச-ரச விரண்டறிவுடைய நத்தை சங்கு முதலியவைகளுக்கும், பரிச-ரச-கந்தமாகிய மூன்றறிவுடைய எறும்பு கறையான் முதலியவைகளுக்கும், பரிச-ரச-கந்த-ரூபமெனும் நான்கறிவுடைய வண்டு தும்பி முதலியவைகளுக்கும், பரிச-ரச-கந்த-ரூப-சப்தமெனு மைந்தறிவுடைய பறவை விலங்கு முதலியவைகளுக்கும், மேற்பட்ட அருமையான மானிடஜன்மத்திலுதித்த, மூல புருஷரான சுசீலனுக்கும் சுபுத்தி என்பவளுக்கும், பற்றறு நம்பி, பழமைக்கிரங்கி, உண்மை விரும்பி, உற்றதுரைப்போனெனும் நான்கு புத்திரர் தோன்றினர். அந்நால்வர்களின் குடும்பவிர்த்தியே உலகிலுள்ள சகல ஜனங்களுமாம்.

இக்காலவருள் நடந்த சம்பாஷணையைப் பேரறிவுடையர் புகல்வது தகுதி: சிற்றறிவுடைய யான் புகல்வது தகுதியல்ல; ஆயினும் விவேக பாநு பத்திரிகையின் நீரூப நண்பர்கள் சகாயத்தால் இடையூறு வாரா தெனும் துணிவுகொண்டு இங்கு வரையலாயினேன்.

சம்பாஷணை வருமாறு:—

பழமைக்கிரங்கி: பற்றறு நம்பியெனும் மூத்தசகோதரா? ஞான காண்டியாகிய உற்றதுணைப்போனையும், பக்தி காண்டியாகிய உண்மை விரும்பியையும் பற்றி நமக்காவதென்ன? நாமிருவரும் காமகாண்டியா தலால், கர்மகாண்டத்தில் பெரியோர்கள் விதித்திருக்கும் விதியைக்கடந்து, நீ உலக வின்ப துன்பங்களிலாழ்ந்து, பிறந்து இறப்பதும, பிறவியைத் தடுக்க வழிதேடாதிருப்பதும் அழகோ? விடைகூறுக.

பற்றறு நம்பி: மூட சிரோன்மணியாகிய பழமைக்கிரங்கியே! வயதிற்சிறந்தோனுக்கு நீயா புத்திகூறுவது! இது நன்றல்ல; "சிறியோர் செய்த சிறுபிழையைப் பெரியோர் பொறுப்பது கடன்" எனுமான்றோர் வாக்கியத்தை அனுசரித்து மனம்பொறுத்தேன. இனி நான் சொல்வதைக் கேள். யான் தேர்ந்தோரால் கேட்டபடி. உலகில் மூன்று மதங்களுண்டு; அதாவது ஆஸ்திகமதம, நாஸ்திகமதம், ஆஸ்திகநாஸ்திக மதமெனும் மூன்றும். இம்மூன்றில் ஆஸ்திகநாஸ்திக மதத்தைச் சேர்ந்த போலி வைஷ்ணவம், போலி சைவம், போலி மகம்மதீயம், போலி கிறிஸ்தவம், போலி பௌத்தம், போலி பிரமசரியம் முதலிய பல மதங்களில நான் உடன் பட்டிருக்கிறேன். அந்தந்த சமயகர்மங்களும் தெரிந்த எனக்கு நீயா அறிவிக்கப்போகிறாய்? இனி இப்படி வாய் திறவாதே.

பழமைக்கிரங்கி: சத்தியங்கூறாத சண்டாளனாகிய பற்றறு நம்பியே! "மெய்யருக்குப் பொய்யுரைத்தால் தேய்பிறை போற்றவங்குறையுமிடியுண்டாகும்" எனும் பெரியோர் வாக்கியத்தை மறந்தாயோ? ஆச்சரியம்! ஆச்சரியம்! போலி வைஷ்ணவம் சைவம் முதலிய மதங்களில் நீ ஈடுபட்டதாய்ச்சொல்வது நகைப்புக்கிடமே. ஏனெனில், போலியென்பது உண்மைக் கெதிர்மறையாம். அஃதாவது தமோகுணவடிவினராய், சோம்பல், நித்திரை, மயக்கம் முதலியவற்றை யேற்று, மனோ-வாக்கு-காயமெனுந் திரிகரணமொத்துமையின்றி, அடியார்கள்போல வேடந்தரித்துத்திரிகின்ற காதகருடன்கூடி, துர்க்கருமத்தில் பழகிய நீ, யான் வயதிற்பெரியோனென்றும் பிராபுத்தி கேட்கேனென்றும் பெருமை கூறுவது அழகல்ல. "ஆக்குமறிவாலல்லது பிறப்பினால் மிககோனுயர்விறிவுவேண்டற்க" என்பதையுணராமல மறந்து பேசுகிறாய். இஃதன்றி உலகில் மற்

கருமத்திற்கு நற்சரியை, நற்கிரியை, உரியதென்றும் நற்பத்திக்கு நல்யோகமுரியதென்றும், ஞானபாகத்திற்கு இம்மூன்றும் உரியதென்றும், ஆனால் ஞானகாண்ட இம்மூன்றையும் கொள்ளவும் விடவும் அதிகாரியென்றும் சொல்லப்படுகிறது. மனோ-வாக்கு-காயம் இதுதிரிகரணங்களொத்து நற்சரியை செய்பவருக்கு சுகசாலோக பதவியுளதென்றும், நற்கிரியை செய்பவர்களுக்கு சுகசாமீப பதவியுளதென்றும், நல்யோகாப்பியாசிகளுக்கு சுகசாரூப பதவியுளதென்றும், சருதியுக்தி ஸகாயத்தால் ஞானப்பியாசஞ்செய்து அனுபவியானவர்க்கு சுகசாயுச்சிய பதவியுளதென்றும் ஆன்றோர் தெரிவித்திருக்கின்றனர். நீ மேலிரண்டு பதவியடைய முயற்சி செய்யாமற் போனபோதிலும் பெரிதல்ல. நற்கர்மகாண்டத்திற் சொல்லியவிதிப்படி செய்யாமல், ஆற்றுநீர், ஊற்றுநீர், வேற்றுநீர் எனும் முந்நீரும் அளக்கக்கூடாத ஆழமுடைய சமுத்திரம் போன்ற, மண்ணாசை, பெண்ணாசை, பொருளாசை யெனும் ஜலம் நிரம்பிய சமுசார சாகரத்தில் மூழ்கி, உண்பதும், உறங்குவதும், விஷயசுகங்களை அனுபவிப்பதுமே மேலான பதவியென்று எண்ணியிருக்கிறாய். நீயும் உன் போலியரும் விஷய சுகங்களுக்கு வேண்டிய லௌகிக பாஷையைக்கற்று "விலங்கொடு மக்களனையரிலங்கு நூல் கற்றோரோடேனையவர்" "பாடையேறினும் ஏடுகைவிடேல்" எனும் மேலோர் வாக்கியங்களை மறந்து சாஸ்திர உண்மையறியாமல், சூரியோதயம், நடுப்பகல், அஸ்தமனம் இக்காலங்களிற்செய்யவேண்டிய நியமாதி கர்மங்களைக் காலந்தவறிச் செய்கிறீர்கள். இஃதன்றி நமக்காக தந்தை முதலிய பெரியோர்களும், வீட்டில் பூசைசெய்யும் சம்பளகாரனும், செய்யும் சந்திய ஜப தபங்களின் பலன்கள் நமக்குவருமென்று, அறிவீனமாகத் திருப்திசெய்துகொள்ளுகிறீர்கள். நீவிர் துர்ச்சரியை, துர்க்கிரியையாகிய சொக்கட்டான், சோழி, காகிதமாடல், சதுரங்கமாடல், வசியம், மாரணம், மோகனம், உச்சாடனம், ஏவல், சூனியம் முதலிய தொழில்களில் பிரவேசித்து, "வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம் பூதங்களைந்துமகத்தே நகும்" எனும் பழமொழியை மறந்து வஞ்சமனதால் ஜீவர்களை வதைத்து, மூடமே மோட்சம் தெளிவே நரகம் என்பதைக் கடைப்பிடித்து, நற்கர்மகாண்ட விதியை மறந்திருக்கும் நீ மறைந்துறையாடுவது அழகா? இது நிற்க, "தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின் தன்னெஞ்சே தன்னைச்சுடும்" எனும் பழமொழியறியாயா? கர்மகாண்ட விதிதவறாமற் செய்தவனுக்கு சாலோக சாமீப பதவிகள் வருமென்பதை மறந்து நரகத்திற்குப் பாத்திரனாகவா என்னுடன் பிறந்தாய்? இனியாவது நல்வழியில் நடப்பாயாக வென்றனன்.

பற்றறு நம்பி: அப்பா பழமைக்கிரங்கியே! வேதாகம விதிப்படி கர்மகாண்டத்தை அனுஷ்டிப்பது சம்மிடசெயலல்லவென்றும், இவை

கடவுள் செயலென்றும் நினைத்து இருந்தேன். இதுதவிர காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் முதலிய துற்குணங்களிலீடுபட்டு, உலக பத்தராகிய பொய்யன், திருடன், கொலையன், குருவை நிந்திப்பவன், குடியன் முதலிய பஞ்சமஹா பாதகரிட பெயரை ஒளிக்காமல் நடப்பதுதான் நம்மிட கர்மகாண்ட விதியென்றும், அதைச் செய்வதுதான் நம்மிட அனுஷ்டான மென்றும் கருதியிருந்தேன். உலகிலுள்ள சிலமனுஷரை அடுத்து நீ குற்றமாய் எடுத்துக்காட்டிய காகிதம் சொக்கட்டான் முதலிய ஆட்டங்களை ஆடுகிறது குற்றமாவென்று விசாரித்தேன். அப்பெரியோர் புலி பாம்புகள் போல் சீறிகோபித்து, லௌகிகத தொழில் செய்தோய்ந்தவுடன்—

"கண்புகையும் நெஞ்சுலரும் கைகாலலுத்துவரும்
வெண்புகையான் மேனி வெளுக்குமே-பண்பாய்க் கேள்
ஈரல் கருகிவரு மிந்திரியம் நஷ்டமாம்
பாழும்புகையிலையின் பண்பு." எனும் பாட்டின் கருத்தையறிந்தும் அறியாதவர்கள்போல்-சுருட்டுப்பிடித்தும், கஞ்சா அபினி கலந்த பூரணாதிகளருந்தியும், கள், சாராயம், பீர், ஒயின் முதலிய லாகிரி வஸ்துக்களை சிநேகருடன் குறைவறக் குடித்தும், ஜீவப்பிராணிகளை வதைசெய்து போஜனம செய்தும், ரவுண் டேபிலில் கருநகம்பளம் பரப்பி சுற்றி நாற்காலிகளில் உட்கார்ந்து காகிதம், சொக்கட்டான், சதுரங்கங்களைப்பரப்பி ஆடுவதும்தான்பேரின்ப சுகமென்று தெரிவிததார்கள். பிறகு அப்பெரியோர்காலில் விழுந்து "சோம்பரென்பவர் தேம்பித்திரிவர" எனும் கருத்தறியாத ஏழைகள் சூதாடுவதேஜீவனோபாயமாகக் கொண்டு மேற்கண்ட ஆட்டங்களை ஆடினால் கவர்ன்மென்டார் சூதாடுவது குற்றமென்று அவ்வேழைகளைப்பிடித்து தண்டித்திருக்கிற காரணம் என்னவென்று கேட்டேன். (அவர்கள்) "திக்கற்றவனுக்கு தெய்வந்துணை" அன்றி சர்க்கார் துணைகிடைப்பது அரிதாகையால் அவ்வேழைகளைச்சுலபமாய்த் தண்டிக்கிறார்களென்றும், தனவான்கள் குற்றத்தைக்கண்டுபிடிக்கக் கவர்ன்மென்டாருக்குகூடுமாயினும், அவர்களநடை, உடை, பாவனையால் அவர்களையோக்கிய ரென்று மதித்துசாக்குப்போக்காய் விட்டுவிடுகின்றன ரென்றார். இதுநிற்க. தம்பீ! இப்படி குற்றமான தொழிலைச் செய்வதைவிட உலகில் அமைந்த நீதிசாஸ்திரங்களை வாசிக்கலாமன்றோ? "தன் குற்றம் பாரான் பிறர் குற்றங் காண்பிப்பான் என்குற்றமாகு மிறைக்கு!" என்பதைக் கண்ணுற்று இனி பிறர் குற்றம் அதிகமாய் எடுத்துரைக்க எனக்கு இஷ்டமின்றி விடுத்தனன். இப்படி வீண்காலம் கழிக்கும் சூதர்களுடன்கூடி சூதாடுவதால் குற்றம் உளதென்பதற்குச் சாஸ்திரவிதியுளதாகில் தெரிவிக்கவேணும் என்றனன். (இன்னும் வரும்.)

பு. ஜயராமபிள்ளை.

# ஆசிரியர் மாக்சு முல்லர்.

அறிவருளுடைய ஆன்றோர் யார்க்கும்
குறியுடையொருமொழி கூறக்கருதினும்.
இவ்வாண்டிறுதியி னிகழ்ந்தவோர் செய்தியை
எவ்வாறுரைப்பம்! எங்ஙனமாற்றுவம்!
எண்டிசைப் புலவரும் ஏனையரும்புகழ்
பண்டிதர் முல்லர் பரகதியடைந்தார்!

சீருறும் எத்தேசத்தரும் அவரை
நேர்பெற அறிவராயினும், இந்தியர்
மற்றெல்லாரினும் மாண்புறு கடமை
உற்றவராமென் றுறுதியாய்ச்சொல்லலாம்.
பிறவியிற் சேர்மன், ஆங்கிலப்பழக்கம்;
துறவியில் இந்தியனுமெனத் துலங்கினன்.
மனமெலாம் இந்தியா! மனங்கொளல் இந்நூல்!
கனவிலும் நனவிலும் காண்பதும்அதுவே,
ஆயினும் வளர்த்த தாயினையறியாச்
சேயினை நிகர்த்தான் செய்தியாதென்னில்:
படத்திற்கண்டு பரிந்தோம்பியபின
கடத்திற்காணிற் கால்படுமென்றோ!
ஒருபோதாயினும் ஓங்கிந்தியாவெனும்
திருமாதினையவன் தெரிசித்திலனே.

மோட்சமூல ரெனத்தகும் முனிவராம்
மாட்சிமை பொருந்திய மாக்சு முல்லரின்
சரித்திரம் மிகவுஞ் சுருக்கமா மெனினும்
விரித்துணர்ந்தோரின் விழுப்பம்தருமே.
ஆயிரத்தெண்ணூற் றிருபத்துமூன்றாம்
ஆண்டின் டிசம்பர் ஆறாம்தெய்தியில்,
சேர்மனி தேசத் துத்தரதிசையில்
தேசாவென்னுஞ் சிறுபட்டினத்தில்,
பணக்குறைவாயினுங் குணநிறைகுலத்தில்
பிறந்தனர் புலவர் சிறந்தசெங்கதிர்போல்.
தந்தையின்நலத்தை மைந்தனுமாக்குமென்

றெந்தையோ ரிசைத்த பொதுவிதியின்படி
விநதைசேர் வெல்கிம் முல்லரெனும் இவர்
தந்தையுமோர் பெருங் கவியென்றறிந்தோம்.
தானகவியாதலின் றன்மகற் காற்றும்
வான்கடனுணர்ந்து வளர்த்தனன் கல்வியில்.
சிறிதாயினும் நெறியறியாச் சிறியரைக்
கட்கடலாட்டிக்க மக்குழிவீழ்த்தும்
நட்பிலாப்பொருளை நல்கிலர் சிறிதும்.
மைந்தனுமாங்கே தந்தையின் பெருமையை
சிந்தையில எவரும் எண்ணிடச்செய்துதன்
அந்தமிழுதவிநன்காற்றினன். நிற்க.
முன்பதினெட்டா முறையுறுவயதில்
தன்மூதலாகிய தரித்திரந்துணையாச்
சிற்சிலபள்ளியிற் சிலகாற்படித்துப்
பொற்புறப்புகுந்தனர் எங்கெனிற் பெருமைசால்
லிப்சிக்சர்வ கலாசாலைதனனில்.
ஈங்கிவர் செலவுக் கென்செய்தாரெனில்
பாவகாயெழுதுவர் கூலியைப்பெறுவர்
எழுத்துக்கூலியாற் கழித்தனர் சிலகால்.
ஆசான் புரோக்கசெனபவரிடத்தில்
ஆசையோடாய்ந்தனர் ஆரியமொழியை.
அவ்விடத்தோர்அரும் வித்தியாபட்டம்
அடைந்தபின் அண்டினர் பேர்லின் சங்கம்
ஆங்கவர் ஆரியம் பயின்றுவருகையில்
ஆங்கிலநாட்டினின் றாரியசுவடிகள்
வாங்கினர் பிரசிய துரைத்தனத்தார்பல:
வைகைநீர் பருகும் வகையதுபோல் அம்
மெய்மொழி நூலெல்லாம் விரைந்தாய்ந்தனரே.
அதன்பின் னேகினர் பாரிசு நகர்க்கு,
இதன் பிரசங்கங்கேட்கும் பொருட்டே.
அங்குறுகாலையிற் புங்கமாமறையை
அச்சிடவேண்டுமென் றிச்சித்திருந்தனர்.
அத்தொழில் முடிப்பான் கைத்தொழில்முதலாம்
எத்தொழிலுந் தோபத்திமையால் ஒளிர்
ஆங்கிலநாட்டில் ஆக்சுபோர்டெனும் கலை
தாங்கியநகரில் தங்கினன் அக்கால்

வயதமோர் இருபதும் மூன்றுமாயிற்றே.
உலகில் சிகரிவா தோங்குமிப்பதியில்
பலமொழிபயின்று பலகலையோர்ந்து
பலபல திறத்திற் படிப்படியுயர்ந்து
சிறிதும்வழுவிலாச் சீர்மையிற்சிறந்து
தெறியுணவெல்லாம் சேர்படவறிந்து
இடைவிடா முயற்சியும் ஈடிலாகடையும்
உடைமையின் இடையூ றிடம்பெறுதகல
உன்னதபதவியின் மன்னவர்வணங்க
கவிஞர்கள் எல்லாங் கலந்துறவாட
பூமகள்போற்றிட நாமகள் மடியில்
வீற்றிருந்தானென விளம்பலும்தகுமே!
இன்னவனிவ்வா றுயர்ந்ததினுட்கிடை
என்னெனில் மிகவும் இளமையிற்றானே
தன்றொழில்விதுவெனத் தேர்ந்துகொண்டதுவும்
அன்றுதொடங்கி ஆயுள்நாளெல்லாம்
மாறுதலிலேயே வழங்கிவந்ததுவும்
ஆறுமென்பர் ஆழ்ந்துணர்ந்தோரே!
ஆதியிலாரியம் ஆய்ந்திடுங்காலை
தோதினரொருவரு மங்கிலேயாதலின்
எதிவன்படிப்பா னென்பயனுமென்
றோதுவார்போலவுந் தோன்றினர் குறிப்பால்.
எனினுமிவர்க்கது இருவகைச் செல்வமுந்
நனிதருந்தொழிலாய் நன்கமைந்ததுவே!
ஞானமறை முதலே நவிலுவாயுடனே
ஆன்முறைதவறா தச்சிட்டருளினன்.
கீழ்நாட்டிருந்து போருமாணவர்க்கு
தாழ்வுறுவண்ணந் தயவுடன்பேணி
புத்தியும பத்தியும் புகட்டிவதுடனே
சித்தியுமுத்தியுந் தோந்திடச்செய்வான்.
கல்வியில் ஆங்கிலமாது மேம்படற்கிச்
செல்வனுஞ் செறிந்தகற் றுணையெனச்செப்பலாம்.
ஐரோப்பியகலா சங்கத்தார், இவர்
பயிராச்சிய பழங்கல்வி வளநலம்
ஓர்ந்துமதிப்பதில் ஒருவரையொருவர்
தேர்ந்துமுந் தவர் செய்கன்றியறிவர்.

ஆதலினன்றே ஆங்குள சபையெலாம்
வேதமுல்லரைவேண்டித் தழுவின.
பிரான்சிய சங்கத் தெண்மரிலொருவர்,
நிறைபொருளுணர்ந்த நிபுணர்கூட்டம் எனும்
முறைதெரிசபையின் முப்பதிலொருவர்
ரோமரசற் குரித்தாங்கலாசபைக்குத்
தாமோரங் கமாந் தசமரில், அன்றியும்
கேம்பிரி, எடின்பர், டப்பிளின் எனுந்தலத்
தோம்பிடு கலவிக்கழகத்தோரால்
தத்துவம் சட்டம் எனு மிருதுறையினும்
வித்தக ரென்னும் ஓர் விழுமியபட்டம்
பெற்றவர் புகழினிப் பேசுமா றெங்ஙனம்!
நற்றவருறறவர் நமக்கினியாரோ!
தொண்ணூற்றிரண்டினில் லண்டன்மாநகரில்
எண்ணூறு மேற்றிசை எத்தேசத்தரும்
மிக்கநலம் பெறக்கூடிய சபையில்
தக்கோனிவ னெனத் தலைவனாக் கொண்டனர்,
இன்னுமிவரது நட்பினர் யாரெனில்
சின்னவர் சிறியவர் மன்னவர் மறையவர்
முன்னவர் பின்னவர் தன்னவர் தமர்பிறர்
என்னவராயினும் பின்னும் என்னுதி
துன்னிய கேளிராக் கொளுந்தகைமையர்.
அன்னவர் தன்மை யீ தெனவறிந் தரசர்கள்
நனையமொழியால் நயந்துபசரிப்பர்;
இன்னதற் கிரண்டொரு தாரணமிசைப்பாம்:
செர்மனிதேசச் சக்கரவர்த்தியும்
இம்மகற் கடிக்கடி எழுதுவர் கடிதம்.

ஆரந்துருக்கர் க்காரியமெனினும்
வழுத்தகா ணுடைய சுலுத்தான வேந்தனும்
பண்டிதர் முல்லரைக்கண்டபொழுது
மன்னிய அன்பொடு துன்னிய நட்பால்
அணித்தழுவியற்றிப் பணிந்துகொண்டானெனில்
இன்னுமிவர் திறம் பன்னுமாறுளதோ!
தொண்ணூற்றொன்றெனத் துலங்கியவாண்டினில்
தண்ணுற்றெனத் திகழ் சாலிசுபரி எனு
நன்னூற்றிரள் குடிபுகுந்த நெஞ்சினன்
வெண்ணீர்மையுடன் வேண்டிநற்றினங்க
கண்ணோடுறுமணி, பண்ணுறழ்மொழி
வெற்றிக்கொடிகொள் விக்டோரியாவெனும்
ஆங்கிலத்தரசியார் பாங்குறு முல்லரை

ஆக்தரக்கச் சபாமந்திரி யாக்கினர். •
முந்திய முதலாம் மந்திரியாகிய
புத்தியிற் சிறந்த கிளாட்சன் என்னும்
சிந்தாமணியாஞ் சிறகுணச செல்வன்
நந்தா நட்புடன் நயந்தனனிவனை.
இவ்விருவர்க்கும் இடைநிகழ கடிதம்
செலவிய பலவுஞ் சிலகாலததில்
இவவுலகறிய இனிவெளி வரலாம்.
இத்தனைக்குமவர் அததேசத்தில்
வித்தையைநாடி வரும்பரதேசி!
பாரீர்! பாரீர்! பகுத்தறிந்திதனை
ஓரீர்! ஓரின் உண்மை விளங்குமே!
மன்னனிற் கற்றோன் சிறப்புடையானெனப்
பன்னிய மூதுரைப் பயன் கண்டோமே!
இம்மகான் செய்த இணையிலா நூல்பல!
அம்மா! எண்ணிடில் அளவிறந்தனவே!
எத்தனையாயினும் அத்தனை நூலினும்
மெத்தவும் விழுமிய செம்பொருட் பொலிவே!
எல்லாவற்றின் பெயரு மியம்பிட
வல்லே மல்லே மாயினு மொன்றிசின்
டாயினுங்கூற அடாததொன்றன்றே!
ஆரியமொழியின்வரலா றென்னுமோர்
சீரிய நூலும், சிறப்புடனிலங்கும்
சமையோற்பத்தியும் வளர்ச்சியும் என்னுமோர்
அமைப்புறு நூலும், ஆன்றோர் மெச்சும்
இந்திய தத்துவநூல்வரலா றெனும்
சந்தமார் நூலும், சகலருங் கொளற்காம்
மொழியிலக்கணம்மெனமொழியி லக்கணமே
எமொழியாயினுந் தமமொழியாக்கிடும்
நூன்முதலாகிய நூல்பல வியற்றி
நானிலத்தெவரும நயம்பெறவருளி
ஊன்கொள் உடன் நன்குறற்றி
வானபுகழ் நிறுத்தி வானடைந்தனனே!

மு. போ. ஈசுரமூர்த்தியாபிள்ளை

---

மறையானநூலின்பொருள்யாருமோர்ந்து மதிபெற்றுயச்செய்தவன்
முறையானகல்விமுதனூலியற்றி முடிமன்னர்போற்றுபுகழோன்
பொறையாதிசேர்மையுருவான முல்லர்புவிமீதுசெய்தடனெலாம்
நிறையாவியற்றிநேதியாவுமுறதி நிறைவான்புகுதன்னரோ!

பத்திராதிபர்.